[9th September 1958

SRI A. A. RASHEED : Who are the persons responsible for this, Sir?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, whoever might have been responsible, the responsibility has been fixed on one Sri Venkataraya Sastri, and he has paid the amount.

Untouchability

* 121 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to subsidise leading dailies to do propaganda by writing in their columns articles and stories against the practice of untouchability; and

(*b*) if so, the amount spent for that purpose so far?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. JAGANNATHAN : தீண்டாமை ஒழிவதற்கு மக்களிடம் மன மாற்றம் ஏற்படவேண்டும். அந்த மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நல்ல பிரசாரம் தேவை. அதற்காக, மத்திய சர்க்கார் இந்த சர்க்காருக்கு தீண்டாமை ஒழிப்பிற்காகக் கொடுக்கும் மானியத்தை முக்கியமான தினசரி களுக்குக் கொடுத்து, தகுந்த மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கதை களேயும் கட்டுரைகளேயும் அந்த தினசரிகளில் தினந்தோறும் பிரசுரிக்கச் செய்வதற்கு அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : பத்திரிகைகளில் கட்டுரைகளைப் பிரசுரிப்ப தன் மூலம் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்ய சர்க்கார் முன்வரவில்லை. இருந்தாலும், இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலும் மூன்று டெபுடி சேவக்குகளேயும் மூன்று அஸிஸ்டெண்ட் சேவக்குகளேயும் நியமித்து அவர் கள் மூலம் பிரசாரம் செய்து வருகிறோம். அதோடு, ஹரிஜன நல சங்கம், தீண்டாமை ஒழிப்பு லீக், ராமசாமி அடிகள் சங்கம் ஆகிய மூன்று சங்கங் களுக்கும் நிதி உதவி அளித்து அவர்கள் மூலமாகவும் பிரசாரம் செய்து வருகிறோம். மேலும், நன்றாகப் பாட்டுக்கள் புனேயக் கூடியவர்களைப் பாட்டுக்கள் கட்டச் சொல்லி, அப்பாட்டுக்களை கிராமபோன் ரிகார்டுகளாக எடுத்து, அவைகளை ஹரிஜன நல அதிகாரி, ஜில்லா பப்ளிஸிடி அதிகாரி, ப்ளாக் அபிவிருத்தி அதிகாரி முதலிய அதிகாரிகளிடம் கொடுத்து, அவை கள் மூலம் பிரசாரம் செய்யும்படி அவர்களிடம் சொல்லியிருக்கிறோம்.

SRI J. MATHA GOWDER : தீண்டாமை ஒழிப்பிற்காக வேறு பலவகைப் பட்ட நடவடிக்கைகள் எடுத்தாலுங்கூட அதை ஒழிப்பதற்கு சிரமம் ஏற்படு கிறது. ஆகவே ஒரு ஜாதிக்காரரும் தங்கள் ஜாதியில் இருந்து கல்யா ணம் செய்யக்கூடாதென்றும் வேறு ஜாதியில் இருந்துதான் கல்யாணம் செய்து கொள்ளவேண்டுமென்றும் கட்டாயப்படுத்தி அதற்காக ஒரு சட்டம் கொண்டுவர சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அப்பேர்ப்பட்ட சட்டத்தை அரசாங்கம் கட்டாயமாக கொண்டு வரமுடியாது.

SRI A. V. P. ASAITHAMBI : தீண்டாமை ஒழிப்பிற்காக ஒரு சினிமா படம் விலைக்கு வாங்குவதாக அரசாங்கம் உத்தேசித்து இருந்தது. அதை வாங்கி விட்டார்களா ? அல்லது வாங்கும் தீர்மானத்தை கைவிட்டு விட்டார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் தனியாக கேள்வி போட வேண்டும்.